# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2135/30 - 2019 අගෝස්තු මස 06 වැනි අඟහරුවාදා - 2019.08.06

*2135/30 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**அம்பாந்தோட்டை மாநகர சபை அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதிக்கான அறிவித்தல்**

*நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டத்தின் மற்றும் அதன் பின் திருத்தியமைக்கப்பட்ட சட்டப் பிரிவுகளின் உப பிரிவு 8F இன் பிரகாரம், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இந்த சட்டத்தின் உப பிரிவு 8(A) இன் பிரகாரம் தயார் செய்யப்பட்ட அம்பாந்தோட்டை மாநகர சபை அபிவிருத்தி திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி அனுமதி வழங்கினேன் என்பதை, சட்டத்தின் உப பிரிவு 8G இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17 மற்றும்18 ஆம் மாடிகள்,
"சுஹுரு பாய",
ஸ்ரீ சுபத்திபுர வீதி,
பத்தரமுல்லை,
2019, ஓகத்து 01.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அம்பாந்தோட்டை நகர சபை அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதி**

*அம்பாந்தோட்டை பிரதேச சபை அபிவிருத்திப் பகுதிக்காக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரிவு "8A" இன் கீழ் தயாரிக்கப்பட்ட அம்பாந்தோட்டை அபிவிருத்தித் திட்டமானது, பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட திருத்தப்பட்டவாறான சட்டத்தின் பிரிவு 8F இன் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் 2019, ஓகத்து மாதம் 01 ஆந் திகதி அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

*கலாநிதி ஜகத் முனசிங்க,*
*தலைவர்,*
*நகர அபிவிருத்தி அதிகார சபை.*

*2019, ஓகத்து 01.*

*08-757*